**TAMILNADU POLLUTION CONTROL BOARD**

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST & CLIMATE CHANGE BY POOMALUR ROUGH STONE & GRAVEL QUARRIES CLUSTER FOR THE PROPOSED QUARRY PROJECT OF 14.35.69 HECTARE LOCATED AT S.F. NOS. 263/2B(P), 263/2C(P), 263/2D, 304/2(Part), 303/2A2A, 303/1(P), 305/1(P), 307/1(P), 307/2(P) AND 252/1B POOMALUR VILLAGE, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT, HELD ON 16.08.2021 AT 04.00 PM IN THE COLLECTORATE (GDP HALL), GROUND FLOOR, PALLADAM ROAD, TIRUPPUR DISTRICT.**

**Name of the Project:**

M/s. Poomalur Rough Stone & Gravel Quarries Cluster located at S.F. Nos. 263/2B(P), 263/2C(P), 263/2D, 304/2(Part), 303/2A2A, 303/1(P), 305/1(P), 307/1(P), 307/2(P) AND 252/1B, Poomalur Village, Palladam Taluk, Tiruppur District to an extent of 14.35.69 Ha.

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Dr. S. Vineeth, I.A.S. | District Collector,<br>Tiruppur District,<br>Tiruppur |
| 2. | Er. V. Swaminathan | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 3. | Er. C. Vanaja | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 4. | Er. G. Senthilkumar | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 5. | Thiru. R. Sathyaseelan | Deputy Director (a/c)<br>Geology & Mining,<br>Tiruppur District |
| 6. | Thiru. H. Lakshmiram prasath | Assistant Geologist,<br>Geology & Mining,<br>Tiruppur District |
| 7. | Project Proponents (05 Nos.) | Annexure - I enclosed |
| 8. | Thiru. D. Thangaraj | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem. |
| 9. | Public | 41 Nos. (Annexure - II enclosed) |

The District Collector, Tiruppur has addressed that it is proposed to conduct public hearing for the proposed five nos. and existing three nos. of M/s. Poomalur Rough Stone & Gravel Quarry. Further stated that the public can ask their doubts and requests which will be video graphed. The Pollution Control Board and Mines Department will clarify the doubts as per the law and any other details may also viewed in the booklet and in the screen.

The District Environmental Engineer, Tiruppur South has requested the project consultant Thiru. P. Thangaraj to explain about the project.

The Geologist Thiru. P. Thangaraj explained about the project through Power point presentation.

**PUBLIC VIEWS:**

**1. Thiru. Vignesh, Pallipalayam Village**

The construction materials are available at low cost for building construction. He has stated that during blasting, dust emission arises. He also stated that blasting is carried out only after prior information and requested to continue the same.

**2. Thiru. Thulasidas, Valayapalayam Village**

He stated that since the quarry is located adjacent to their place, it is useful to the nearby public for going to work in the quarry.

**3. Thiru. Sunandha Reddy, Environmentalist.**

He congratulated the management for the upcoming of this quarry. He stated that in his opinion, unemployment is the major issue now-a-days and 95% of the people depend on private sectors for their employment. He also appreciated the presentation given by the consultant of this project about the EIA study report and the base line date that he acquired regarding this project.

He also suggested the following.

a. To assess the health status of the public in the radius of 10 Km.

b. To assess the ground water quality in the nearby villages.

c. To improve the crop productions 40 to 50%.

d. Instead of normal plantation, fruit bearing trees may be planted.

e. To provide employment and skill development program to the local people.

f. To constitute a co-ordination committee comprising of pollution control Board, Village Panchayat and district administration using the CSR fund for the welfare of the village.

g. If the precautionary measures are taken, the pollution level will be reduced.

Finally he said unconditional permission may be granted to the project proponents.

**4. Thiru. K. Chinnasamy Kidathuraipudur Village.**

He has stated that he belongs to Kidathuraipudur Village. All the quarries are located in the eastern side. Only Valayapalayam Village is located in eastern side to the quarries. During south west wind pattern alone the dust is carried out to east side and no damage is arising. The north east wind is very slow and comes through rainy season with humidity and hence, no dust is emanated.

**5. Thiru. M. Sudharsan, Environmentalist.**

He expressed his wishes and said as unemployment is the biggest problem, industries are required and industries are providing jobs for the local people, the lorries & tractors of local people shall be used in this quarry. He also stated CSR fund may be utilized for children's education and the children shall not be employed. He stated no damage shall be done to water, air and environment. "Muffled Blasting" method may be carried out. Finally he welcomed the project.

On behalf of the District collector, Tiruppur and Tamilnadu Pollution Control Board, the District Environmental Engineer, thanked all the public who have participated in this meeting

The proceedings of the meeting were video graphed and recorded in CD which is enclosed.

| | |
|---|---|
| District Environmental Engineer<br>TNPC Board, Tiruppur South | District collector<br>Tiruppur |

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**16.08.2021 அன்று மாலை 04.00 மணி அளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொதுமக்கள் குறை தீர்க்கும் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற தி/ள் பூமலூர் குவாரி குழுமம், க.ச. எண் 263/2B(P), 263/2C(P), 263/2D,304/2(Part), 303/2A2A, 303/1(P), 305/1(P), 307/1(P), 307/2(P) மற்றும் 252/1B – ல் பரப்பு 14.35.69 ஹெக்டர், பூமலூர் கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம் திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

## திட்டத்தின் பெயர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், க.ச. எண் 263/2B(P), 263/2C(P), 263/2D, 304/2(Part), 303/2A2A, 303/1(P), 305/1(P), 307/1(P), 307/2(P), மற்றும் 252/1B பூமலூர் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். பூமலூர் குவாரி குழுமம் நிறுவனத்தின் பூமலூர் குவாரியின் பரப்பு 14.35.69 ஹெக்டர் திட்டத்தின் வரைவு.

## பங்கேற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர். சு. வினீத்<br>இந்திய ஆட்சிப் பணி. | மாவட்ட ஆட்சியர்,<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர். |
| 2. | திரு. வ. சுவாமிநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 3. | திருமதி. செ. வனஜா | உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 4. | திரு. க. செந்தில்குமார் | உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 5. | திரு. இரா. சச்தியசீலன் | உதவி இயக்குனர்(கூடுதல் பொறுப்பு)<br>புவியியல் மற்றும் சுரங்க துறை,<br>திருப்பூர் மாவட்டம். |
| 6. | திரு. H. லட்சுமிராம் பிரசாத் | உதவி புவியியலாளர்,<br>புவியியல் மற்றும் சுரங்க துறை,<br>திருப்பூர் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 7. | திட்ட உரிமையாளர்கள் (5 Nos) | இணைப்பு - I ல் உள்ளபடி |
| 8. | திரு. தங்கராஜ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர்,<br>புவி ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு,<br>சேலம் மாவட்டம். |
| 9. | பொது மக்கள் | 41 Nos. (இணைப்பு - II ல் உள்ளபடி) |

கூட்டத்தின் துவக்கத்தில், மாவட்ட ஆட்சியர் திருப்பூர் அவர்கள் பூமலூர் கிராமத்தில் உள்ள ஐந்து மற்றும் மூன்று சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி கருத்து. கேட்புக் கூட்டம் நடைபெற உள்ளது என்று கூறினார். இது சம்பந்தமான கோரிக்கைகள் மற்றும் சந்தேகங்கள் கேட்கலாம் எனவும், கேட்கப்படும் சந்தேகங்கள் கோரிக்கைகள் வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் அதற்கு சட்டரீதியான விஷயங்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் சுரங்கத் துறைகள் பதில் அளிப்பார்கள் எனவும் அதேபோல வேறு விசயங்கள் இருந்தால் அதை புத்தகத்திலும் மற்றும் திரையிலும் காணலாம் என்றும் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம், திருப்பூர் தெற்கு அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு. பெ. தங்கராஜ் அவர்களை திட்டத்திற்கான விளக்க உரையை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் திரு. பெ. தங்கராஜ் அவர்கள் இத்திட்டத்திற்கான விளக்க உரையை Powerpoint Presentation மூலம் விளக்கினார்.

கூட்டத்தில் பேசிய பொது மக்களின் கருத்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. திரு. K. விக்னேஷ், பள்ளிபாளையம் (பொது மக்கள்)**

இவர் தன் உரையில் குவாரி இருப்பதால் கட்டுமானப் பொருட்கள் குறைவான விலையில் கிடைப்பது கட்டிட பணிகளுக்கு உதவிகரமாக இருக்கிறது என்றும் குவாரியில் வெடி வைக்கும் போது புகை வருகிறது எனவும், வெடி வைக்கும் போது முன் எச்சரிக்கையாக தகவல் கூறிவிட்டுத்தான் வைக்கிறார்கள் என்றும் அதே போல் எப்போதும் செய்தால் எந்த பிரச்சினையும் இல்லை என்றும் கூறினார்.

**2. திரு. M. துளசிதாஸ் வலையப்பாளையம் (பொது மக்கள்)**

இவர் தன் உரையில் குவாரிகள் தங்கள் பகுதியின் அருகில் இருப்பதால் தங்கள் பகுதி இளைஞர்கள் வேலைக்கு செல்வதற்கு வசதியாக உள்ளது என்று கூறினார்.

**3. திரு. சுனந்தா ரெட்டி, சுற்றுச்சூழல் ஆர்வலர்,**

இவர் இந்த குவாரி வருவதால் இந்த நிர்வாகத்தை வாழ்த்துவதாகக் கூறினார் வேலையின்மை என்பது தற்போது முக்கிய பிரச்சனையாக உள்ளது எனவும்

95 சதவீதம் மக்கள் தனியார் துறைகளையே சார்ந்துள்ளதாகவும் கூறினார். சுற்றுச் சூழல் ஆலோசகரால் தரப்பட்ட சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் இந்த திட்டத்தை அவர் சேகரித்த அடிப்படை தகவல்கள் நன்றாக உள்ளதாகவும் கூறினார். மேலும் அவர் தனது கருத்துகளை கீழ் கண்டவாறு பதிவிட்டார்.

1. 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மக்களின் சுகாதார நிலையினை மதிப்பீடு செய்யவேண்டும்.
2. அருகில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.
3. பயிர் உற்பத்தியை 40-50 சதவீதம் மேம்படுத்தலாம்.
4. பொதுவாக மரம் நடுவதற்கு பதிலாக, பழ வகை மரங்களை நட வேண்டும்.
5. ஊள்ளூர் மக்களுக்கு வேலை வாய்பப்பும், திறன் மேம்பாட்டு பயிற்சியும் தர வேண்டும்.
6. பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியைக் கொண்டு கிராம நலனுக்காக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், கிராம ஊராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் சேர்ந்து ஒருங்கிணைப்பு குழு அமைக்க வேண்டும்.
7. முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் எடுப்பதில் மாசு குறையும் எனவும் தெரிவித்துக்கொண்டார்.

இறுதியாக இத்திட்ட உரிமையாளர்களுக்கு நிபந்தனையற்ற அனுமதி வழங்க வேண்டும் என்று கூறினார்.

### 4. திரு. K. சின்னசாமி, கிடாதுறைபுதூர் (பொது மக்கள்)

இவர் தன் உரையில் தான் கிடாதுறைபுதூரை சேர்ந்தவர் என்றும் குவாரிகள் அனைத்துமே ஊருக்கு கிழக்கேதான் இருக்கிறது என்றும் அதனால் எந்த ஒரு சுற்றுச் சூழல் பிரச்சனையும் வருவதில்லை எனவும் வலையபாளையம் என்ற ஊர் மட்டுமே கிழக்கு திசையில் உள்ளது என்று கூறினார். மேலும் அவர் தென் மேற்கு காற்றின் போது கிழக்கு நோக்கி தான் புகை செல்கிறது எனவும் இதனால் ஊருக்கு எந்த பாதிப்பும் வருவதில்லை என்றும் கூறினார். அவர் வடகிழக்கு பருவக்காற்று என்பது மிகவும் மெதுவாகத்தான் வரும் அதுவும் மழைகாலத்தில் காற்று ஈரமாக இருப்பதால் புகை பெரிதாக வருவதில்லை என்றும் கூறினார்.

### 5. திரு. M. சுதர்சன், சுற்றுச் சூழல் ஆர்வலர்.

இவர் தனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு வேலையின்மை பெரும் சவாலாக உள்ளதால் தொழிற்சாலைகள் தேவைப்படுகிறது என்றும் இந்த தொழிற்சாலைகள் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறது எனவும் உள்ளூர் மக்களின் லாரிகள் மற்றும் டிராக்டர்கள் இந்த குவாரியில் உபயோக படுத்த வேண்டும்

என்று கூறினார். மேலும் பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியை குழந்தைகளின் கல்விக்காக உபயோகப் படுத்தப்பட வேண்டும் எனவும், குழந்தை தொழிலாளர்களை பணியில் அமர்த்த வேண்டாம் எனவும், காற்று, நீர் சுற்றுச்சூழலுக்கு எந்த விதமதன பாதிப்பும் செய்யக்கூடாது எனவும் கூறினார். Muffled Blasting முறையை கையாள வேண்டும் என்று கூறினார். இறுதியில் தான் இந்த திட்டத்தை வர வேற்பதாகக் கூறினார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின், இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பாக கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்.

கூட்ட நிகழ்வை காணொலி காட்சியாக "பதிவு செய்யப்பட்டு" குறுந்தகட்டில் பதிவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
திருப்பூர் தெற்கு

மாவட்ட ஆட்சியர்
திருப்பூர் மாவட்டம்